இணைந்த சேவை சுற்றறிக்கை கடிதம் : 01/2026

எனது இலக்கம் : PA/CS/POLICY/පොදු
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.03.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்

<u>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களை வினைத்திறன்காண் தடைத்தாண்டலிருந்து விடுவிப்பதற்குரிய பாடநெறி தொடர்பானது.</u>

இலக்கம் 1840/34 இனைக் கொண்ட 2013.12.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்கள் தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 05 ஆண்டுகளுக்குள் அத்தரத்திற்குரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

02. அதன் பிரகாரம், தற்போது தரம் I இல் 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்தும் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்யத் தவறியமையால் சம்பள அதிகரிப்பை இழந்த உத்தியோகத்தர்களுக்கு, இணைந்த சேவைகள் சுற்றறிக்கை கடிதம் 01/2024 இன் மூலம் 2023.12.31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த சலுகைக்காலத்தை, 2025.12.31 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் PSC/APP/4/62/2018 மற்றும் 2026.03.03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. மேலும், 2025.12.31 ஆந் தினத்திற்கு தரம் I இல் 05 வருட கால சேவையைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அளித்து, மேற்படி பயிற்சித் திட்டத்தை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ என்.யு. நிஷான் மெண்டிஸ்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்